3

# திருக்குறளில் இல்லற மேலாண்மை

**முனைவர் திருமதி.ச.ரஞ்சனி,**

**உதவிப்பேராசிரியர், ஆர்.வி.எஸ் கலை அறிவியல் கல்லூரி,**

**சூலூர்,கோவை.641402.**

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனை நன்னெறிப்படுத்தும் அற இலக்கியங்கள் பலவாகும். அவற்றுள் எக்காலத்தும்,எல்லா சமயத்தினரும் ஏற்றுக்கொள்ளும் உயரிய கருத்துக்களை கொண்ட உன்னத நூல் உலகப்பொதுமறையான திருக்குறள். இந்நூலானது அறம்,பொருள்,இன்பம் என்ற முப்பாலின் வாயிலாக எல்லாக்காலத்திற்கும், எல்லோருக்கும் பொருந்தக்கூடிய வாழ்வியல் கருத்துக்களை எடுத்துரைக்கின்றது.

தமிழரின் பண்பாட்டில் இன்றியமையாதது இல்லறம் ‘ஒருவனுக்கு ஒருத்தி ‘என்ற தமிழரின் உயரிய இல்லறப் பண்பாடு உலகமே வியந்து போற்றக்கூடியது.இல்லறத்தின் மேன்மைகளை, இல்லறத்தாரின் இயல்புகளை இன்றைய கால மக்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கில் திருக்குறளில் இல்லற மேலாண்மையை விளக்குவதாய் அமைவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** இல்வாழ்வின் சிறப்பு, வாழ்க்கைத்துணை, அன்பு, அறம் இல்லறம், இல்லறத்தாரின் கடமைகள், இல்லறமே நல்லறம், துணைவேந்தர்கள், இல்வாழ்க்கையின் அச்சாணி, மக்கட்பேறு, மக்களின்பம், தாய் தந்தையரின் கடமை.

## முன்னுரை

மனித வாழ்வின் அடிப்படை இல்லறம். அந்த இல்லறத்தை செம்மையாக நடத்துபவர்களே சிறந்தமனிதர்களாக இருக்க முடியும். இல்லறத்தை திறம்பட நடத்த முடியாதவர் இவ்வுலகத்தாரால் புறக்கணிக்கப்பட்டு சமூகமதிப்பை இழந்து நிற்பர். இல்லற மேலாண்மை என்பது குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துதல், விட்டுக்கொடுத்தல், உதவுதல், பிறருக்கு மதிப்புக் கொடுத்து மகிழ்தல் போன்ற நல்ல பண்புகளின் உறைவிடம் இல்லற மேலாண்மை .இவற்றை விளக்குவதாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## இல்லறம்- விளக்கம்

“ இல்லறமின்றி நல்லறமில்லை “ என்பார்கள். இல்வாழ்க்கை என்பது மனிதரின் மேன்மையை உலகினுக்கு உணர்த்தும் பெருவாழ்கையாகும். இல்லறம் என்பது உறவும் , நட்பும் கூடி இன்புறுவது, வாழ்வது என்று குறிப்பிடலாம். மனித வாழ்க்கையின் அடிப்படை மனை.இல்லத்தில்

அமைதியும்,மகிழ்ச்சியும் இருந்தால் செயல்கள் அனைத்தும் வெற்றியே. இல்லத்தில் கணவன் மனைவி உறவும்,உறவினர்களின் வருகையும், அன்பும் தான் நல்லதொரு இல்லறத்திற்கான அடையாளம்.

**அன்பும்- அறனும்**

இல்வாழ்விற்கு இரண்டு கண்களாக அமைவன அன்பும், அறமுமாகும்.மனத்தயக்கமின்றி உடலும் உயிரும் போல அன்பு பேண வேண்டும்.மக்களை அன்புடன் போற்றவேண்டும்.அறவழியில் வாழ்க்கை நடத்த வேண்டும். பிறருக்கு உதவி செய்தல் வேண்டும்.இத்தகைய இல்வாழ்க்கை அழகும், பெருமையும் உடையதாகும்.அதனால் தனக்கும், தன்னையண்டிய பார்க்கும் ,தனது நாட்டிற்கும் பெரும் பயனாகும். வீடு வாழ்ந்தால் நாடு வாழும்.இல்லற வொழுக்கமே நாட்டின் உயிர்.

இதனையே வள்ளுவர்,

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது “ ( திருக்குறள்.45 )என்ற குறளின் மூலமாக குறிப்பிட்டுள்ளார்.

**இல்லறமே நல்லறம்**

மனித வாழ்க்கையின் சிறப்பு இல்வாழ்க்கை. இல்வாழ்க்கையைச் சிறப்பாக வாழாதவன் உயிரோடு இருந்தும் பயனில்லை.அற வழியில் வாழ்க்கை நடத்த வேண்டும்.பிறருக்கு உதவி செய்தல் வேண்டும்.இதனை வலியுறுத்தும் நோக்கில் வள்ளுவப் பெருந்தகையவர்கள்.

“ இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை “ ( குறள் 41 ) என்கிறார். வள்ளுவர் இக்குறட்பாவில் இல்லறத்தான் அறவழியில் உள்ள துணையோருக்கு உதவி செய்ய வேண்டும் என்கிறார்.பிறருக்கு உதவுதலே இல்லறத்தின் சிறப்பாகும்.

**நற்பேறு**

மனிதன் பெறும் பேறுகள் பலவற்றினும் நல்ல வாழ்க்கைத் துணை அமைதலைச் சிறப்பாக கருதினர்.' இல்லாள் 'என்ற சொல் இல்லத்தை ஆளும் மாட்சி பெற்ற தலைவியைக் குறிக்கும். அதற்கு எதிரான இல்லான் என்ற சொல் தலைவனைக் குறிப்பதில்லை.மாறாக வறியவனைக் குறிக்க இல்லான் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். எல்லா வளமும் நிரம்பியவளை இல்லாள் எனச் சிறப்பிக்கின்றனர்.

பழந்தமிழர் இல்லத்தை ஆளும் பொறுப்பினைப் பெண்ணுக்கு அளித்தனர். ஆடவனின் வாழ்வில், இன்ப துன்பங்களில் துணையாக இருப்பவள் என்னும் பொருளில் வள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் என்றார். இல்லாள் சிறப்பாக அமைவதைக் குறிக்கத் ' துணை நலம் '

என்றார். குடும்பப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களை வாழ்க்கைத் துணை நலத்தில் கூறியுள்ளார்.

ஒரு நல்ல மனைவி வாய்ப்பதே பெறுதற்கரிய பேறாகும். நல்ல குணங்களும், நல்ல செயல்களும் உடையவனாய் மனைவி அமைந்து விட்டால் அதுவே மிகச்சிறந்த பேறாகும். இதை வள்ளுவர்,

“ இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை “ ( குறள் 53 ) என்று குறிப்பிடுவர்

**வாழ்க்கைத் துணை**

மனையாள் மாண்புடையவளாக இருக்கவேண்டும்.ஒருவனுக்கு அமையும் இல்லறத்துணை நல்லவளாக கணவனை அனுசரித்து நடக்கும் பெண்ணாக இருத்தல் வேண்டும் என்பதனை வள்ளுவர்,

“ மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்கான் வாழ்க்கைத் துணை “ ( குறள் 51 )

மனை என்னும் சொல்லே மனையாளைத் தான் குறிக்கிறது.’ மனைவி' என்பவள் தன் கணவனின் வருமானத்திற்கு ஏற்ப இல்லறத்தை நடத்திச் செல்பவளாக இருக்க வேண்டும்.மேலும் தன் குடும்பத்தார் அனைவரையும் அனுசரித்து, அரவணைத்துச் செல்பவளாக இருக்க வேண்டும். இதனை,

“ தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் “ ( குறள் 56 )

கற்பு நெறி வழுவாது தன்னைக் காத்துக் கொண்டு தன் கணவனின் பெருமை பேசி, அவனைக் காப்பவளே சிறந்த பெண் என்கிறார் வள்ளுவர். மனையறம் மாண்புற அமைய வேண்டுமானால் மனையாள் மாண்புடையவளாக இருக்க வேண்டும் என்ற கருத்து இங்கு வெளிப்படுகின்றது. இல்லறத்தில் கணவன் முதன்மையானவராக இருப்பினும், மனைவியின் சிறப்பாலும் , அறிவுத்திறத்தாலும்,பொறுமையாலும் குடும்பம் மேன்மையடைகிறது.

**மக்கட்பேறு**

மனையறம் சிறக்க கணவன் மனைவி கருத்தொருமித்து வாழவேண்டும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். மாண்பு பெற்ற மனைவாழ்வு , மாந்தருக்கு மங்கலமாகும். அத்தகைய நல்லணி, நன்மக்களை பெறும் பேறாகும்.

“ மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன் மக்கட்பேறு” ( குறள் எண் .60)

என்ற குறளின் மூலம் அறியமுடிகிறது. இல்லறத்தாருக்கு பிள்ளைப்பேறே பெருஞ்செல்வமாகும். இல்வாழ்க்கையில் பெறவேண்டிய பேறுகள் பல உள்ளன.அவற்றுள் நல்ல மக்களைப் பெறும்

பேறு ஒன்றாகும்.அறிய வேண்டியவற்றை அறிவதற்குரிய மக்களைப் பெறுவது சிறப்பாகும்.நற்பண்புடைய நன்மக்களைப் பெற்றவர்களுக்கு எழுபிறப்பிலும் தீமைகள் அணுகுவதில்லை என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இதனை,

“ பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. “ ( குறள் 61)
“ எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்” ( (குறள் 62 ) என்று கூறுகிறார்.

**விருந்தோம்பல்**

இல்லறத்தாரின் கடமைகளுள் விருந்தோம்புதல் சிறப்பானதாகும். நம்முடைய உறவினர்கள், நண்பர்கள் இவர்களை உபசரித்து வரவேற்றலை வள்ளுவர் குறிப்பிடவில்லை.புதியவராய் வருவோர்க்கு உதவி செய்து வாழும் நன்மையை விருந்தோம்பல் என்கிறார். விருந்தினர் வீட்டிற்கு வெளியில் இருக்க தான் மட்டும் உண்பது கூடாது. சாவா மருந்தாகிய அமிழ்தமேயானாலும் அவர்களுடன் பகிர்ந்து உண்ணுதல் வேண்டும்.விருந்தினரை ஓம்புபவரின் வாழ்க்கை வறுமையில் வாடாது.விருந்தோம்பல் ஒரு வேள்வி.விருந்தோம்புகின்ற இந்த வேள்வியின் பயனைப் பெறாதவர்களின் இல்வாழ்க்கை பயனற்றது.வருந்திப் பொருளைத் தேடிச் சேர்த்துக் காத்துப் பிறகு ஒரு காலத்தில் அதை இழந்துவிட்டுப் பற்றுக்கோடு இல்லையே என்று அவர்கள் வருந்த நேரிடும்.ஆகையால் விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமை இருந்தால் அது செல்வம் உள்ள போது வாய்த்த வறுமை என்று சொல்ல வேண்டும்.இதனை வள்ளுவர்,

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று. (82 )
இனைத்துனைத்து என்பதொன்று இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப்பயன் .( குறள் எண் .87)

என்ற குறட்பாக்களின் மூலம் உணர்த்துகிறார்.

**தம்மினும் தம்மக்கள்**

இல்வாழ்க்கை சிறக்க அன்பும் அறமும் வேண்டும்.அன்பே அறத்தை வளர்க்கும் ஆற்றலாகும்.கணவனும் ,மனைவியும் தம்முடைய இல்லற வாழ்க்கையில் ஒத்த அன்புடையவராய் இருத்தல் வேண்டும்.அந்த அன்பின் வெளிப்பாடே குழந்தைகள். எல்லோருக்கும் ,தம்மைவிடத் தமது மக்கள் அறிவிற் சிறந்திருப்பது மகிழ்ச்சியை ஏற்படுத்தும். மகனை ஈன்றதும் தாய் மகிழ்ச்சி அடைவாள்.அதைக்காட்டிலும் தன் மகனை சான்றோன்,மேதாவி,அறிவாளி என்று பெரியோரால் பாராட்டப்படும் போது பெருமகிழ்ச்சி அடைவாள்.

“ ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.“

(குறள் 69)என்றுதாயின்உவகையை ,பெருமித்த்தை சிறப்பாக வடித்துள்ளார் வள்ளுவப் பெருந்தகையார்.

வள்ளுவர் கல்வி,கேள்வி ஆகிய இடங்களில் ஆணுக்கு என்றோ,பெண்ணுக்கு என்றோ பிரித்துக்கூறவில்லை.பொதுவாகவே கூறிச்செல்கிறார்.’ தம்மினும் தம்மக்கள் ‘ என்பதிலிம் தாய் – தந்தை என்னும் இருவரையும் சேர்த்தே குறிப்பிட்டார்.குழந்தை யின்பத்தை பெறுவதோடு தாய் தந்தையரின் கடமை முடிவதில்லை.

“ ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடன் “ (புறம் 312)

என்று சங்ககாலப் பெண்பாற் புலவர் பொன்முடியார் பாடியுள்ளார்.குழந்தை வளர்ந்த போது அவனை அறிவுடையவனாக்குவது தந்தையின் கடமையாகும்.அறிவுடைநோன் அவையில் அவனை முதன்மையாக இருக்கச் செய்யவேண்டும்.அவனுடைய அறிவு தன்னுடைய குடும்பத்தை வாழ்விப்பதுடன் சமுதாயத்தை வாழ்விக்கிறது.அதனால் தந்தை தன் மகனை உயர்த்துவதால் சமுதாயத்தையும் உயர்த்துகிறார்.

“ தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல். ( குறள் 67 )

“ தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது “ ( குறள் 68 )

என்னும் குறள்கள் தந்தையின் அறிவுக்கொடையைக் குறிப்மன.அவருடைய அறிவு வழியில் நடக்கும் மகனும் தன் கடமை உணர்ந்து நடத்தல் வேண்டும்.அவனுடைய கடமையை,

“ மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்”
(குறள் 70) என்ற குறளின் மூலம் உணர்துகிறார்

**முடிவுரை**

இல்லறமே அறங்கள் அனைத்திலும் சிறப்புடையதாகும். இன்றையகாலச் சூழலில் கணவன், மனைவி இருவருக்கும் அன்பு, சகிப்புத்தன்மை, அடக்கம், விட்டுக்கொடுத்தல், பொறுமை போன்ற பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்து இல்லறத்தை மேன்மையடைச் செய்யவேண்டும்.வள்ளுவர் கூறிய அறவழியில் இல்லற மேலாண்மை இருந்தால் வீட்டிலும்,நாட்டிலும் நல்லறம் நிலைத்து நிற்கும் எனலாம்.

**துணைநூற் பட்டியல்**


1. திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், 63 பிராட்வே சென்னை .600108.ஐந்தாம் பதிப்பு மே 1993.
2. திருக்குறள் கட்டுரைகள் – முத்தமிழ்க்காவலர்,கலைமாமணி,டாக்டர்.கி.ஆ.பெ.விசுவநாதம் ,டி.லிட் ,பாரி நிலையம்184,பிராட்வே,சென்னை.600108. எட்டாம் பதிப்பு,டிசம்பர் 1985.
3. திருக்குறள் களஞ்சியம் ( தொகுதி 9 ) தொகுப்பாசிரியர் பேராசிரியர் டாக்டர் அரங்க.இராமலிங்கம்.வர்த்தமானன் பதிப்பகம்,21 இராமகிருஷ்ணா தெரு,தியாகராய நகர்,சென்னை – 600017.
4. வள்ளுவர் வழங்கிய வாழ்க்கை நெறி – பொன்பரமகுரு திருவரசு புத்தக நிலையம், 13 தீனதயாளு தெரு,தியாகராயர் நகர்,சென்னை .17. முதற்பதிப்பு ஆகஸ்ட் -2000